**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 01 /2020 PW . 1**

| | |
|---|---|
| **பெயர் : அழகு** | **தந்தை/கணவர் பெயர்: கருப்பையா** |
| **ஊர் :** | **தாலுகா:** |
| **வயது :** | **தொழில்:** |
| **ஜாதி :** | **சமயம்:** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.07.2025

---

**(1, 2 எதிரிகள் ஆஜர். 3, 4 எதிரிகள் ஆஜரில்லை. 3, 4 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**10.07.2025 முதல் விசாரணை:**

1. நான் தற்போது நெற்குப்பை பூசணிக்களத்தில் குடியிருக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 4வது எதிரி எனது அண்ணன் ஆவார். 3வது எதிரி 4வது எதிரியின் மகன் ஆவார். 28.01.2019ம் தேதி சுமார் 11 – 11.30 மணியளவில் எனது மகள் வீட்டில் இரண்டு மாதம் தங்கிவிட்டு என்னுடைய வீட்டிற்கு நான்வந்தேன். அப்போது எதிரிகள் நால்வரும் என் வீட்டு பக்கத்தில் இருந்தார்கள். என்னுடைய வீட்டின் ஓடுகள் உடைக்கப்பட்டிருந்தது. 1வது எதிரி லெட்சுமணன் என்னை கோத்தா, கொம்மா என்று தரக்குறைவான வார்த்தைகளால் பேசி என்னை அவமானப்படுத்தினார். மேலும் 1வது எதிரி நீ ஏன்டா வீட்டிற்கு வந்தாய் என்று 3, 4 எதிரிகளின் தூண்டுதலின் பெயரில் சத்தம் போட்டார். மேலும் 3, 4 எதிரிகளின் தூண்டுதலில் 1வது எதிரி என்னை பார்த்து உன் சாவு என் கையில் தான்டா உன் கருவை அழிச்சுபுடுவேன் என்றும் அருவாளை தூக்கி வெட்டவந்தார். என் மனைவி 1வது எதிரியை தடுத்தார்.

2. அப்போது 2வது எதிரி மண்வெட்டி கணையால் எனது மனைவியின் வலது பக்க தோள்பட்டையில் அடித்து காயப்படுத்தினார். பின்னர் சண்டையை ராசு மகன் சேவுகன், அழகப்பன் மகன் சுப்பிரமணியன் ஆகியோர் விலக்கிவிட்டார்கள். பின்னர் நெற்குப்பை காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன்.என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான்கொடுத்த புகார் ஆவணம்தான். அதில் உள்ளது எனது கையொப்பம். நான் சொல்லசொல்ல புகாரை எனது மருமகன் எழுதினார். **அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடைய மனைவி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

3. எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். அலுவலக நடவடிக்கைக்காக கு.வி. ஒத்திவைக்கப்படுகிறது.